01.04.2026



மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

அசல் வழக்கு எண்.137/2017

**2026**-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01-ம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய பி.வா.சா.**2**-வது நபரின் வாக்குமூலம் **1969**-ம் ஆண்டு 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி திருமதி.வ.கவிதா என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகரன் | த/பெ. | ரெங்கராஜீலு |
| கிராமம் | டால்மியாபுரம் | தாலுக்கா | அரியலுார் |
| தொழில் | எழுத்தராக உள்ளேன் | சமூகம் | |
| வயது | 58 | நாள் | **01.04.2026** |

பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை

(கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞர் சாட்சி கிரையம் கொடுத்த Vendor மேலும் சாட்சி படி கட்டியதால் எழுத்துபூர்வமான முதன்மை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என தெரிவித்தார்)

தாவா சொத்து ஆரம்பத்தில் வெங்கடுசாமிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். வெங்கடுசாமிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தின் சர்வே எண் 357/289 என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 357/289 என்பது ஓட்டுவில்லை வீடு ஆகும். நான் கிரையம் கொடுத்த வீட்டின் மொத்த அளவு 440

01.04.2026



அடி ஆகும். வெங்கடுசாமிக்கு அழகிரிசாமி, ரெங்கராஜீலு நாயுடு ஆகியோர்கள் வாரிசுகள். வெங்கடுசாமி இறந்த பிறகு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார்கள். 1987 ம் ஆண்டு என நினைக்கின்றேன். அப்போது தான் பாகம் பிரித்துக்கொண்டார்கள். வெங்கடுசாமி நாயுடுக்கு ராமசாமி என்ற மற்றொரு மகனும் உண்டு. வெங்கடுசாமி இறந்தபிறகு ராமசாமி, அழகிரிசாமி, ரெங்கராஜீலு நாயுடு மூவரும் தான் பாகம் பிரித்துக்கொண்டார்கள். தென்வடலாக 20 க்கு 7 என பிரித்துக்கொண்டார்கள். அழகிரிசாமியும், ரெங்கராஜீலும் 20 க்கு 7 என்ற முறையில் வெங்கடசாமி சொத்தை பிரித்துக்கொண்டார்கள். மற்றொரு மகன் ராமசாமி மேல்புறம் சொத்தை பிரித்துக்கொண்டார். அந்த சொத்தின் அளவு 10 க்கு 7 அடி ஆகும். கீழக்கு பக்கத்தில் ரெங்கராஜ்லு நாயுடும் மேற்கு பக்கத்தில் அழகிரிசாமியும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். என் தகப்பனாரும் அழகிரிசாமிக்கு பிரிந்த சொத்தை ஒரு பகுதியை வாடகைக்கு விடப்பட்டதற்கான வரவு செலவு கணக்கு எழுதப்பட்ட ஆவணம் தான் இந்த சிறிய நோட்டு புகத்தகம் என கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞர் கேள்விக்கு சாட்சி அந்த நோட்டு புத்தகத்தை வாங்கி பார்த்துவிட்டு சரிதான் என ஒப்புக்கொள்கிறார். குறியீடு செய்வதற்கு கற்றறிந்த வாதி வழக்கறிஞர் யாரால் எழுதப்பட்டது எனகுறிப்பு இல்லை என ஆட்சேபனை

தெரிவித்தார். ஆட்சேபனையுடம் பி.வா.சாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ராமசாமி எனது பெரியப்பா. எனது பெரியப்பா ராமசாமி யாரை திருமணம் செய்தார் என்று தெரியாது. அவரது மனைவி பெயர் தெரியாது. ராமசாமிக்கும் அவரது மனைவிக்கும் குழந்தை பாக்கியம் இல்லை. வெங்கடசாமியின் மகன் என்ற முறையில் எனது பெரியப்பா ராமசாமிக்கு பிரிந்த சொத்தை சகோதரர்கள் எனது தகப்பனார் ரெங்கராஜீலு நாயுடு மற்றும் அழகிரிசாமியும் சமமாக பிரித்துக்கொண்டார்கள். எனது தகப்பனார் ரெங்கராஜீலுக்கும் அழகிரிக்கும் இடையில் ராமசாமி பாகசொத்து சம்பந்தமாக வழக்கு நடந்து தீர்ப்பாகியுள்ளது. எனது தகப்பனார் ரெங்கராஜீலு நாயுடுக்கு நான், என்னுடைய அக்கா சாந்தி (எ) வட்சலா, ராமதிலகம்(எ)சகாயம், ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர்கள் வாரிசு. என்னுடைய சகோதரர் ஆர்.வெங்கட்ராமனுக்கு திருமணம் ஆகி குழந்தை பிறந்த பிறகு வெங்கட்ராமன், அவருடைய மனைவி அவருக்கு பிறந்த குழந்தை அனைவரும் இறந்துவிட்டார்கள். சரோஜா, சந்திரா, துரைசானி, மாணிக்கம், அன்பழகன் ஆகியோர்கள் அழகிரிசாமியின் வாரிசுகள் ஆவார்கள். எனது தகப்பனார் ரெங்கராஜீலு நாயுடு இளைய சகோதரி ராமதிலகம்(எ)சகாயம் என்பவருக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் ஆம் எழுதி

வைத்துள்ளார். கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞர் சான்றிட்ட உயில் ஆவணத்தை காண்பித்து இது தான் அந்த ஆவணம் என வினவியபோது சாட்சி வாங்கி படித்து பார்த்துவிட்டு சரிதான் என கூறுகிறார். எனவே 23.03.2007 ம் தேதியிட்ட மதிப்பிடப்படாத உயில் சாசனத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.11 ஆகும். என்னுடைய மற்றொரு சகோதரி சாந்தி (எ) வட்சலாவிற்கு என்னுடைய தகப்பனார் 23.03.2007 ம் தேதி ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். அந்த ஆவணம் தான் இது என சாட்சி கூறியதால் சான்றிட்ட 23.03.2007 ம் தேதியிட்ட உயில் ஆவணம் பி.வா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.11 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆகிய உயில் ஆவணத்திற்கு கட்டுப்பட்ட சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை. எனக்கு எனது தகப்பனார் பி.வா.சா.ஆ.11 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவண சொத்திற்கு அருகாமையில் இருந்த 5 செண்ட் நிலத்தில் கடன் இருந்தது. அந்த கடனை திருப்பிவிட்டு நான் எடுத்துக்கொள்ளுமாறு பி.வா.சா.ஆ.11 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெங்டசாமி அண்ணன் தம்பி பிரித்துக்கொண்டு, என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து எனக்கு பாத்தியப்பட்டதாகும். என் தகப்பனாரின் பாக சொத்து எனக்கு பாத்தியப்பட்டதால் தான் அந்த சொத்தை நான் பிரிதிவாதிக்கு

01.04.2026



கிரையம் கொடுத்தேன். எனது பெரியப்பா ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது தகப்பனார் ரெங்கராஜீலு நாயுடுக்கும், அழகிரிசாமிக்கு நீதிமன்ற தீர்ப்புபடி சமமாக பிரித்துக்கொண்டோம். அதன்படி சமமாக பிரித்து தரகோரி 1ம் வாதி மற்றும் சிலருக்கு நான் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பப்பட்ட அறிவிப்பு தான் என்று கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞர் சாட்சியிடம் காண்பித்தார். சாட்சி சரி என ஒப்புக்கொள்கிறார். குறியீடு செய்வதற்கு கற்றறிந்த வாதி வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். பதிலாக பிரதிவாதி வழக்கறிஞர் அலுவலக நகல் என்று கூறுகிறார். எனவே ஆட்சேபனையுடன் அந்த அறிவிப்பு பி.வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய பெரியப்பா ராமசாமி சொத்துடன் சேர்த்து என் தகப்பனாருக்கும் அழகிரிசாமிக்கும் எவ்வளவு பிரிந்தது என்றால் 440 சதுரடியில் தலா 220 சதுரடியாக பிரித்துக்கொண்டோம். இவ்வாறு எனக்கு பிரிந்த 220 சதுடியை தான் பிரிதிவாதிக்கு நான் கிரையம் கொடுத்தேன்.

வாதி வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பகிறது.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.